81

குந்தவையின் கைதி

'குந்தவையே, விமலாதித்தியனை இன்னும் சிறையிட்டு வைத்துக் கொண்டிருப்பதில் உனக்கென்ன அவ்வளவு திருப்தி? அவனைச் சிறைப்படுத்திப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. இனிமேல் அவனால் ஒன்றும் செய்யமுடியாது. வேங்கி நாடே அவனை இனிமேல் அங்கீகரிக்காது, நிச்சயம். நமது ஆட்சியின்கீழ் அங்கு அரசு செலுத்தும் சக்திவர்மனை அந்த ஜனங்கள் அவ்வளவு பிரியத்துடன் ஆதரிக்கிறார்கள். மேலும் குந்தவையே! எனக்கு என்றுமே விமலாதித்தியனிடம் ஒரு பற்று உண்டு. போரில் அவன் எதிர்த்து வந்த அன்று ஏற்பட்டது அது!'

'ராஜேந்திரா! உனக்கு, விமலாதித்தியனிடம்–பற்றா! ஆச்சரியமாக வன்றோ இருக்கிறது. இத்தனை நாள் நீ அதை என்னிடம் சொன்னதே இல்லையே!'

'உன்னிடம் நான் அதை சொல்லவில்லைதான். ஆனால், அது இன்று ஏற்பட்டதன்று. விமலாதித்தியனின் வீரத்தில் எனக்கிருக்கும் மதிப்பு, இன்று நேற்றைய தன்று. என்னுடைய தலைமையின் கீழிருந்த பெருத்த சோழ சைனியத்தை ஒரு சில ஆயிர ஆட்களுடன் எதிர்த்து வந்தவன் அன்றோ அவன்? அவன் தன் உயிரைத் துரும்பாக மதித்ததால் தானே அவ்வாறு என் முன் போர்முனையில் தோன்றினான்? அவன் தோற்றானெனில் அது அவன் சோர்வினாலன்று. நமது பெரும்படை அவனுடைய படையை முறியடித்தது. அவ்வளவுதான். அவனது நிலைமையில் எவ்வரசனும் நம்மைப்போன்ற எதிரியை எதிர்த்து வந்திருக்கவே மாட்டான். விமலாதித்தியன் மானத்தைப் பெரிதாகக் கொண்டவன், சுத்த வீரன். தன் நாட்டின் சேவையில் உயிரைத் தியாகம் செய்ய முன் வந்தவன்.'

★★★

குந்தவைக்கு ராஜேந்திரன் சொன்னது முழுவதும் ஆச்சரியமாக விருந்தது. அதுவரையில் அவளிடம் விமலாதித்தியனைப்பற்றி ராஜேந்திரன்

1943.

ஒன்றுமே சொன்னதில்லை. அவளும் கேட்டதில்லை, அவன் சொன்ன தைக் கேட்டு மெய்ம்மறந்து போனாள்.

தன் தந்தை ராஜராஜ சோழனின் கைதி யென்றுமட்டும் அதுவரை அவள் விமலாதித்தியனைப்பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள். வேங்கி நாடு சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகிவிட்டது என்பதற்கு அடையாளமாக விமலாதித்தியன் ஆயுள் பரியந்தம் கைதியாகவே இருக்க வேண்டுமென்று குந்தவை பிடிவாதம் பிடித்தாள்.

வெற்றியுணர்ச்சியின் பெருக்கில் குந்தவை விமலாதித்தியன் ஒரு மனிதன் என்பதைக் கூட மறந்தாள். தன் நாட்டின் வெற்றிக்கு அவன் ஓர் அடையாளம், உயிர் உணர்வற்ற ஒரு பொருள் என்று எண்ணி விட்டாள். அவன் எப்படி இருப்பான் என்று பார்ப்பதற்குக் கூட அவளுக்கு என்றும் ஆவல் ஏற்பட்டதில்லை. பெண்ணுக்கு இயற்கை யான அந்த எண்ணமே அவள் மனதில் உதிக்கவில்லை. அவள் வெறும் போர்வீர மனப்பான்மையில் பெரிதும் ஈடுபட்டவளாய் தன் பெண்மையையே மறந்திருந்தாள். விமலாதித்தியனை விடுதலை செய்யவேண்டும் என்று ராஜேந்திரன் சொன்னபோதெல்லாம் குந்தவை ஆண்மகனின் கடின சித்தத்துடன் தடுத்து வந்தாள். ராஜேந்திரனே தன் உடன்பிறந்தாளின் இரக்கமின்மையைக் கண்டு கொஞ்சம் வெறுப்பு கொண்டான்.

ராஜேந்திரனும் குந்தவையும் ராஜராஜனுடைய பட்ட மகிஷி தர்ம சக்திவிடங்கியின் மக்கள். இருவரும் சேர்ந்து விளையாடினவர்கள்; சேர்ந்து படித்தவர்கள்; கலைகள் கற்றவர்கள், வில்வித்தை முதலான போர் முறைகளில் கூட குந்தவை பயிற்சி பெற்றிருந்தாள்.

ராஜராஜன் மகளை மிகவும் செல்வமாக வளர்த்தான். அவளுடைய இஷ்டத்திற்கு மாறாக ஒன்றுமே நடக்காது. ராஜ காரியங்களில் கூட குந்தவை யோசனைகள் கூறி வந்தாள். ராஜராஜன் தெற்கே படை யெடுத்துச் சென்றிருந்தபொழுதும், ராஜேந்திரன் வேங்கிக்குச் சென்றி ருந்தபொழுதும் குந்தவைதான் தஞ்சையில் ராஜ்ய பாரத்தை வகித்து நடத்தினாள்.

குந்தவை இருபது வயது அரிவை. சோழ நாட்டின் வளப்பத்திற்கு ஈடு சொல்வதுபோல, அக்காலத்து நாட்டு மகளிரும் காட்டுக் கொடிகள் போலக் கட்டழகு கொண்டவர்கள். அப்பெண்களுக்கு நடுவே குந்தவை தாமரைக் குளத்தில் மொக்குகளிடையே நிற்கும் விரிமலர் போல இருந்தாள். ஆடல் பாடல், சித்திரம் வரைதல், செய்யுள் இயற்றல் முதலிய கலைகளில் முற்றிய தேர்ச்சி பெற்றிருந்தாள். அக்கலை ஞானத் திற்கேற்ப மிருதுத் தன்மையும் புத்தி கூர்மையும் கொண்டிருந்தாள்; ஆனால் வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவை களைக் கற்றதால் வீரமும், தைரியமும் கூடக்கொண்டிருந்தாள்.

ராஜேந்திரனின் பேச்சைக் கேட்டபொழுது முதல் முதலாக குந்தவை, பெண்மை தன்னுள் புலருவதை உணரலானாள். ராஜேந்திரன் அப்பொழுது விமலாதித்தியனைப் பற்றி உரைத்தபொழுது அவள் என்றுமில்லாத ஒரு அதிர்ச்சிக்குள்ளானாள். அன்றுதான் முதன் முதலாக அவள் ஒரு உயிர்கொண்ட வீரனைப்பற்றிக் கேள்வியுற்றது. தன்னையும் மீறி அப்பெயரைக் கேட்டு பிரமை கொண்டாள். தன்னுள் ஒரு வீர புருஷனின் உருவம் உதிப்பதைக் கண்டு மெய் சிலிர்த்தாள். ஆனால் அதைக் காண பயந்தாள்.

★★★

வேங்கிநாட்டை விட்டுவந்து வெகு காலமாக தஞ்சையில் சிறைவாசம் செய்துகொண்டு கிடக்கும் விமலாதித்தியன் உயிரினிடத்திலேயே ஒரு வெறுப்பு கொண்டு விட்டான். தனது சொந்த நாட்டை மறுபடியும் காண முடியும் என்ற நம்பிக்கை யற்றுப்போய் அவனுக்கு வெகு நாளாகிவிட்டது.

'நான்தான் அதற்குக் காரணம். நீ அநேக தடவை அவரை விடுதலை செய்யவேண்டுமென்றுதான் சொன்னாய்' என்றாள் குந்தவை ஏக்கம் கொண்ட பார்வையுடன்.

'அவனுக்குச் சிறைக் கட்டுப்பாடு அதிகமில்லை, உண்மை.'

'அதிலென்ன ஆறுதல் இருக்கக்கூடும் அவருக்கு?'

'அரசனுக்கேற்ற மரியாதை யெல்லாம் நடக்கிறது.'

'அதிலென்ன ருசி இருக்கப்போகிறது?'

'சொந்த நாட்டைவிட்டு வெளியேறி, தூர தேசத்தில் பிரிவாற்றாமை கொண்டு தவிக்கிறான்.'

'அளகாபுரியிலிருந்து வெளியேற்றப்பட்டு ராமகிரி ஆசிரமத்தில் இருந்துகொண்டு ஏங்கிய யக்ஷனைப்போல' என்று குந்தவை குறுக்கிட்டுக் கூறினாள்.

'தஞ்சை மாளிகைச் சிறையிலிருந்துகொண்டு கோதாவரி நதிக்கரையின் சுதந்திரத்தை நினைத்து நினைத்து உருகி உயிர் விடுகிறான்.

'அவருக்கு என்ன வயது அண்ணா?' என்று குந்தவை கேட்டாள்.

'விமலாதித்தியனுக்கா? அவனுக்கு வயது முப்பத்தைந்து. பாதி காலத்தைச் சிறையில் கழித்திருக்கிறான்.'

'எப்படி இருப்பார் அண்ணா?'

'சுத்த வீரனுக்குண்டான லக்ஷணங்கள் பொருந்தியவன்-குன்று போன்றவை என்பார்களே, அந்தத் தோள்கள் குன்றிப்போய்விட்டன. பாவம்!... மாலை வேளையில் வடக்குநோக்கி நின்றுகொண்டு பித்துப் பிடித்தவன்போல தனக்குள்ளேயே பேசுகிறான். பல வருஷங்களின் தனிமை அவனை ஒடுக்கிவிட்டது. அவன் வீரத்தையே குலைத்து

விட்டது. சில சமயங்களில் திடீரென்று மனமிழந்து பலபலவென்று கண்ணீர் உதிர்க்கிறான். தைரியமிழந்தவன்போலக் கலங்குகிறான்...

'அவனுடைய சரித்திர வீழ்ச்சியையும் அவனுடைய அஞ்சா நெஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கும் பரிதாபக் காட்சியையும் காண எனக்கு உண்மையில் பிரமை தட்டுகிறது...

'குந்தவையே! இனிமேல் நீ அவன் விடுதலையைத் தடுப்பது கொடுமையாகும். அவன் இப்பொழுதே நடைப்பிணமாகி விட்டான். அவன் நினைவு தவறினவன்போல நடமாடுகிறான்' என்று ராஜேந்திரன் குந்தவையைப் பார்க்காமல் பேசிக்கொண்டே இருந்தான்.

பக்கத்தில் விக்கல் சத்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். குந்தவை உதடுகள் துடிக்க அழுதுகொண்டிருந்தாள்.

'இனிமேல் அவரை வெளியே விட்டாலென்ன, விடாவிட்டால் என்ன? அவரிடம் இனிமேல் என்ன இருக்கப்போகிறது?... என்ன பேடித்தனம் நம்முடையது! என்னை அவமானம் பிடுங்கித் தின்கின்றது. ராஜேந்திரா!'

'அவனைப் பார்த்தால் நீ உண்மையில் உருகிப் போவாய். அப்பேர்ப் பட்ட துயர் உருவாக இருக்கிறான், அம்மா!'

'நான் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அந்தத் துயர் நிறைந்த தூயமுகம் என்முன் இருக்கிறது.'

'பேடியென்றாய்! உண்மையாகவே நான் இதுவரை பேடியாக இருந்துவிட்டேன். ஒரு விஷயத்தை நான் இதுவரை யாரிடமும் சொல்லாமல், தைரியமற்ற பேடியாக இருந்துவிட்டேன்.'

'அதென்ன விஷயம்?' என்று குந்தவை ஆவலுடன் கேட்டாள்.

'வேங்கி நாட்டுப் போர்க்களத்தில் விமலாதித்தியன் என் உயிரைக் காப்பாற்றினான்!'

குந்தவை தன் பெண் இயற்கையுடன் போராடினாள். அவள் உடல் நடுங்கிற்று.

'போர்க்களத்தில் – விமலாதித்தியன் – உன் உயிரைக் காப்பாற்றி னாரா? – ராஜேந்திரா! நீ இப்படி யிருப்பாய் என்று நான் எண்ணவில்லை!'

அவள் சொன்னது ராஜேந்திரன் காதில் படவில்லை.

'போர்முனையில் வேங்கி நாட்டு வீரன் ஒருவன் என்னிடம் எப்படியோ நெருங்கி வாளால் என்னை வெட்டவிருந்தான். அதை விமலாதித்தியன் கவனித்து, பாய்ந்து வந்து அதைத் தடுத்தான். பிறகு தான் நாம் வெற்றி பெற்றோம்!'

'அப்படியானால் வேங்கி நாடு அவருடையது. அதைத் திருப்பிக் கொடுத்துவிடு, அண்ணா!'

குந்தவை பிறகு ஒன்றும் பேசவில்லை. தள்ளாடிக் கொண்டு நடந்து உள்ளே சென்றாள்.

★★★

'என்ன குந்தவையே, உன் தாயார் என்னிடம் சொன்னது உண்மையா?' என்று ராஜராஜன் தன் பெண்ணை நோக்கி ஆச்சரியத்துடன் கேட்டார்.

குந்தவை வெட்கத்துடன் தலை குனிந்த வண்ணம் 'உண்மைதான், தந்தையே!' என்றாள்.

'ஊரும் பெயருமற்ற விமலாதித்தியனையா நீ உன் கணவனாகத் தேர்ந்தெடுக்கிறாய்?'

'நாம் கவர்ந்துகொண்டதால் அவர் ஊர், அவருடைய மனதை விட்டகலவில்லை.நம்மிடம் நாட்டைப் பறி கொடுத்ததால், அவர் பெயரும் போகவில்லை. அது இப்பொழுது இன்னும் கொஞ்சம் அதிகமாக விளங்குகிறது' என்று சொல்லிவிட்டுச் சட்டென்று, 'என் மனதில்' என்று சேர்த்துச் சொன்னாள். பிறகு 'அது போதாதா?' என்று நீர் ததும்பிய கண்களுடன் தந்தையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு கேட்டாள்.

ராஜராஜ சோழன் பிரமித்துப் போனார்.

'விசித்திரமாக வன்றோ இருக்கிறது! நேற்றுவரை, அவனை விடுதலைகூடச் செய்யக்கூடாதென்று சொல்லி வந்தாயே, திடீரென்று எப்படி உன் மனதில்–?'

'நேற்றுவரை அவர் ஒரு மனிதன் என்ற நினைப்பே என் மனதில் இல்லாமலிருந்தது. இன்று ராஜேந்திரன் என் கண்ணைத் திறந்து விட்டான். அவர் ஒரு மனிதன் என்று கண்டேன். நானும் ஒரு பெண் என்பதும் நினைவுக்கு வந்துவிட்டது!' என்று கனிந்த குரலில் மெள்ள சொன்னாள்.

'நீ அவனை நேரில் பார்த்தாயோ?'

'தேவையே இல்லை. அவர் வேறு திசையில் இருந்தால், அவரைப் பார்க்க வேண்டிய அவசியம் ஒரு வேளை இருக்கலாம். நமது கைதி அவர். பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? அவர் வேங்கி நாட்டரசனா யிருந்தால் பார்க்கலாம். வெற்றிபெற்ற வேந்தனாயிருந்தால் பார்க்கலாம். அவர் இப்பொழுது வீழ்ச்சிமூர்த்தி. அவருக்கு வேறொரு அணியும் தேவையில்லை!'

'சோழ மண்டலாதிபதியின் பெண்ணாகிய நீ என் கைதியையே மணப்பதா?'

'உங்கள் பெண்ணின் கையைப் பிடிப்பவர் உங்கள் கைதி எப்படி யாவார்?' என்று குந்தவை கொஞ்சம் புன்னகையுடன் கேட்டாள்.

'பின் உன் கைதியா?' என்று ராஜராஜன் சிரித்துக் கொண்டே கேட்டு விட்டார்.

'குழந்தாய்! விமலாதித்தியனைச் சிறைகொண்ட அன்றே இந்த எண்ணம் எண் மனதில் ஏற்பட்டுவிட்டது. ஆனால், உன்னைப் பலவந்தம் செய்ய எனக்கு இஷ்டமில்லை, இன்று என் மனோரதம் நிறைவேறி

விட்டது. விமலாதித்தியனைப்போன்ற சுத்தவீரனை நான் கண்டதே இல்லை...

'அவன் மறுபடியும் வேங்கி நாட்டரசனாவான், நீ வேங்கி யரசி!...

'உங்கள் மூலமாகச் சோழர்களுக்கும் சளுக்கியர்களுக்கும் நட்பும் சம்பந்தமும் ஏற்படட்டும். தென்னாட்டுச் சிற்றரசுகள் ஒன்றுபடட்டும். உங்களுடைய சந்ததிகள் பாரத நாட்டையே ஏகாதிபத்தியமாக்கட்டும்...

'குந்தவையே, இன்று என் ஜீவியம் பலனடைந்து விட்டது!'

ராஜராஜசோழனின் கண்களில் நீர் நிறைந்தது. தலைக்கு மேல் வெளியே பறந்த புலிக்கொடியைப் பார்த்துப் பரவசமடைந்தவர் போலக் கை தூக்கி வணங்கினார்.

•